## ***DEPOSITION OF WITNESS***

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.448/2015

## PW: 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. ஜெயஸ்ரீ | Taluk | : | சென்னை |
| Husband's Name | : | திரு.மதிவாணன் | Calling | : | LW2 |
| Village | : | சென்னை | Age | : | 41 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 15th day of September 2025.

Signature of Witness.

(Accused absent. Petition filed and allowed. Assistant Public Prosecutor Grade-I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் காஞ்சிபுரத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் கும்பகோணம் சரக துணை பதிவாளராக செப்டம்பர் 2011 முதல் ஆகஸ்ட் 2014 வரை பணிபுரிந்தேன். 07.05.2013 அன்று கள அலுவலர், திருவிடைமருதூர் அவர்கள் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பினார். என்னிடம் காட்டப்படும் 07.05.2013 ம் தேதியிட்ட கூட்டுறவு சங்க கள அலுவலர், திருவிடைமருதூர் அவர்கள் அனுப்பிய அறிக்கையில்

என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த அறிக்கையுடன் உர இருப்பு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) அறிக்கையில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உரம் இருப்பு சம்மந்தமாக முறைகேடு நடந்ததாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையை தொடர்ந்து கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைப்பெற்ற முறைகேடு சம்மந்தமாக விசாரணை செய்வதற்காக கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 82-ன் கீழ் மேற்படி சங்கத்தினை ஆய்வு செய்வதற்கு கும்பகோணம் வட்ட கள அலுவலர் திரு.சிவக்குமார் அவர்களை நியமித்து 13.05.2013 அன்று ஒரு உத்தரவு பிறப்பித்தேன். என்னிடம் காட்டப்படும் 13.05.2013 தேதியிட்ட செயல்முறை ஆணையில் துணை பதிவாளர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 13.05.2013 தேதியிட்ட செயல்முறை ஆணை ந.க.எண்.1800/2013/தொ.வே.கூ ஆணை அ.சா.ஆ.4 ஆகும்.

3) பின்னிட்டு மேற்படி சங்கத்தில் நடைப்பெற்ற பொது விநியோக திட்டம் மற்றும் பயிர்கடன் 2011-2012, 2012-13 ஆகியவற்றிற்கான முறைகேடுகள் குறித்து பிரிவு 82 ஆய்வுடன் சேர்த்து ஆய்வு செய்வதற்காக 25.06.2013 அன்று ஆணை பிறப்பித்தேன். என்னிடம் காட்டப்படும் 25.06.2013 தேதியிட்ட செயல்முறை ஆணையில் துணை பதிவாளர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 25.06.2013 தேதியிட்ட செயல்முறை ஆணை அ.சா.ஆ.5 ஆகும். கள அலுவலர் தனது ஆய்வினை 12.08.2013 க்குள் முடித்து அறிக்கையை சமர்ப்பிக்க இயலாததால் மேலும்

3 மாத காலம் கால நீட்டிப்பு கேட்டு கடிதம் அனுப்பினார். அவர் அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் நான் மேலும் 3 மாத காலம் கால நீட்டிப்பு வழங்கி ஆணை பிறப்பித்தேன். 02.08.2013 தேதியிட்ட ஆய்வு அலுவலர் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.6 ஆகும். 06.11.2013 தேதியிட்ட கால நீட்டிப்பு குறித்து வழங்கிய ஆணை ந.க.எண்.2036/2013/சப அ.சா.ஆ.7 ஆகும்.

4) திரு.சிவக்குமார், கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர் கும்பகோணம் அவர்கள் தனது ஆய்வினை முடித்து 18.11.2013 அன்று அறிக்கையை கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் அலுவலர், கும்பகோணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். மேற்படி அறிக்கையை நான் சுருக்கொப்பம் இட்டு பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் 18.11.2013 தேதியிட்ட கூட்டுறவு சார் பதிவாளர் பிரிவு 82-ன் கீழ் சமர்ப்பித்த ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். மேற்படி ஆய்வறிக்கையில் பயிர்கடன் வழங்கியது, பொது விநியோகத்திட்டம், உரம் விற்பனை, விதை நெல் விற்பனை ஆகிய இனங்களில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் முறைகேடு நடந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடுகளுக்கு திரு.ஜோசப் மார்ட்டின் செயலாளர் பொறுப்பு மற்றும் திரு.சுப்பிரமணியன் விற்பனையாளர் ஆகியோர் பொறுப்பாவார்கள். திரு.ஜோசப் மார்ட்டினால் சங்கத்திற்கு சுமார் ரூ.19,62,000/- மும், சுப்பிரமணியன் என்பவரால் சுமார் ரூ.3,00,000/- இழப்பீடு ஏற்பட்டதாக ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பின்னிட்டு நான்

காஞ்சிபுரம் துணைப்பதிவாளர் ஆக பணி மாறுதலில் சென்றேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

மனுவின் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.